# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 167/மா/2023**
**நாள் : 25.07.2023**

திரு. S. சிதம்பரம்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் - 8, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, வில்லிவாக்கம், 3வது மெயின் ரோடு, பாபா நகர், எண்.15/115 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. சிதம்பரம் என்பவரின் 15.05.2023 நாளிட்ட மனு 19.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 167/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, வில்லிவாக்கம், 3வது மெயின் ரோடு, பாபா நகர், எண்.15/115 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. சிதம்பரம் என்பவரின் 15.05.2023 நாளிட்ட மனுவில்,

1. Baba Nagar (Villivakkam) comprised in Division No.094, Unit-21, Zone-08 of the Greater Chennai Corporation doesn't have a Public Park of its own, till-date, even though, a land of 1,031 Sq.M. was earmarked and allotted in the Layout approved by DTP vide No.41/64, The market value of this land is Rs.10 Crore. (approx)
2. All evidences that a piece of land, measuring 1,031 Sq.M is earmarked for a Park in the Layout of Baba Nagar (Villivakkam) are well established with Plans and other documents, as can be seen from Gist of our recent 22 letters to GCC furnished herewith.
3. Having verified the bona fides of the same by the GCC, a Notice calling for documents of title to the land was issued to the encroachers on 05-09-2022. Apparently, the encroachers do not have any title documents to produce. Following which, a "Lock and Seal" Notice was served on the encroachers by the GCC on 26.11.2022.

4. It is about 6 months now that the Notices were issued, and no further action is being taken by the GCC, despite the fact that it is a clear case of violation of the rules governing the Park land.
5. The Zonal Officials are taking the law into their hands and not even caring for the letter issued by the Superintending Engineer (Parks), Park Department, GCC (HQ), nor to our representations to the Principal Secretary/GCC Commissioner, regarding the undue delay in retrieval of the Park land.
6. The undue delay or laxity on the part of the GCC's Zonal Officials in taking action to retrieve the Park land is a cause for concern to the Baba Nagar Residents; and we are afraid that there could be a nexus between the encroachers and the Zonal Officials, who might have aided the encroachers as to how to go about in the present situation, to thwart action being taken. In this way, the GCC Officials are perpetuating the encroachers' greed and leaving the Residents in the lurch perennially.
7. As the local body, viz, GCC, didn't create a Public Park in the allotted space, the said land was 'usurped by vested interests' in the Nagar and made it a temple premises. Initially, this didn't hamper the Public since there were a lot of vacant grounds. However, in course of time, open land became scarce and the Residents are feeling the pinch of not having a Public Park in their Locality.
8. Now, with increasing population and scorching sunlight, residents feel desperate in the absence of a Public Park in their Locality. Baba Nagar (Villivakkam) is the sole Area (around many Localities here) of not having a Park; and it affects the sentiments of people residing herein. As a time when GCC is involved in creating as many Parks as possible in the City, non-creation of a Park for the Residents of Baba Nagar makes them wonder if they are given a "step-motherly' treatment by the GCC.
9. All the appeals to the Greater Chennai Corporation for creation of a Public Park in Baba Nagar (Villivakkam) fall in 'deaf ears: of the Officials; and they always find some excuse for not doing their bounden duty – to retrieve the encroached Park land.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு 12.6.2023 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.**

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 21.06.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 12.6.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 21.06.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8ன் உதவிப் பொறியாளர் 21.06.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு சென்னை வில்லிவாக்கத்தில் உள்ள பாபா நகருக்கு அருகில் 300 மீட்டர் தூரத்தில் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய பூங்கா உள்ளது என்பதையும், மேலும் வருவாய்த் துறையின் ஆவணங்களின்படி மேற்கண்ட இடம் கோவில் என பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இடம், லே அவுட்தாரர்களால் மாநகராட்சிக்கு OSR இடம் என தானபத்திரம் அளிக்கப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மனுதாரர் தெரிவித்துள்ள பாபா நகர் பூங்கா நிலத்தில் அமையப்பெற்றுள்ள கோவில் தொடர்பாக Calling for approved Plan and documents தாக்கீது 5.9.2022 அன்றும், மேலும் Lock and Seal Notice 26.11.2022 அன்றும் வழங்கப்பட்டுள்ளது எனவும், வருவாய்த் துறையினரிடமிருந்து 13.09.2022 அன்று மாநகராட்சியால் பெறப்பட்ட TSLR-ல் கோவில் இடம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அறிய முடிந்தது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கான நகலினை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

**மனுதாரர் 21.6.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்துகொள்ளவில்லை என்பதால் மனுதாரரை 10.7.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.6.2023 நாளிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு அனுப்பப்பட்டது**

**மனுதாரர் 10.7.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

மேற்கண்ட முகவரியில் 20 வருடங்களாக வசித்து வருகிறேன். எங்கள் பகுதியின் லேஅவுட் 1964ல் DTP ல் அனுமதியளிக்கப்பட்ட சென்னை வில்லிவாக்கம் பாபாநகர் T.S. எண்.172 மற்றும் 173ல் 1031 சதுர மீட்டர் இடம் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டது. மேற்கண்ட இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து கோவில்கள் மற்றும் மண்டபம் கட்டப்பட்டுள்ளன. இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு புகார் மனுக்கள் அனுப்பப்பட்டும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

மேற்கண்ட இடத்தில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் மற்ற கட்டடங்கள் அதாவது கோவில்கள் மற்றும் மண்டபம் கட்டப்பட்டதால், எங்கள் பகுதியில் பூங்கா அமைக்கப்படவில்லை. இதனால் எங்கள் பகுதில் உள்ள பொதுமக்கள் நடைபயிற்சி போன்ற பயிற்சிகள் மேற்கொள்ள இயலவில்லை.

எனவே, மேற்கண்ட எங்கள் பகுதியில் பூங்கா இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடுமாறும் அல்லது மேற்கண்ட பூங்காவிற்கு பதிலாக வேறு இடம் அளித்து அங்கு பூங்கா அமைத்திடுமாறும் ஆவன செய்திட இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் – 8ன் உதவிப் பொறியாளர் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் திரு. S. சிதம்பரம், சென்னை வில்லிவாக்கம், மண்டலம் -8, பாபா நகரில் DTP அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் அனுமதி எண்.41/64ன்படி, 1031 sq.meter நிலம் பூங்காவிற்கான இடம் என்று குறிப்பிட்டு இருந்தாலும், அப்பகுதியில் பொது மக்களுக்கான பூங்கா இல்லையென்றும், வரைபடத்தில் பூங்காவிற்காக காட்டப்பட்டுள்ள இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டடங்கள் அதாவது கோவில்கள் மற்றும் மண்டபம் கட்டப்பட்டுள்ளதால், இவ்விடத்தை பூங்காவாக பாபா நகர் பகுதி மக்கள் பயன்படும் வகையில் மாற்ற வேண்டும் என்று கோரியுள்ளார்.

சென்னை வில்லிவாக்கத்தில் உள்ள பாபா நகருக்கு அருகில் 300 மீட்டர் தூரத்தில் பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய பூங்கா உள்ளது என்றும், வருவாய்த் துறை ஆவணங்களின்படி மனுதாரர் குறிப்பிட்ட இடம் கோவில் என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் அவ்விடம் மனைப் பிரிவுதாரர்களால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு OSR இடம் என தானப்பத்திரம் அளிக்கப்படவில்லையெனவும், மேலும் மனுதாரர் குறிப்பிட்ட பூங்காவிற்கான இடத்தில் அமையப்பெற்றுள்ள கோவில் தொடர்பாக Calling for approved Plan and Document தாக்கீது 5.9.2022 அன்றும் Lock and Seal Notice 26.11.2022 அன்று வழங்கப்பட்டுள்ளது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் உதவிப் பொறியாளரின் வாக்குமூலத்தின் மூலம் அறியமுடிகிறது.

ஆனால், மனுதாரர் முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ள ஆவணங்களான Permanent Land Register TS.No.172 மற்றும் 173ல் 1031 ச.மீட்டர் இடம் கோவில் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதையும், மற்றும் approved Layout by D.T.P. Vide his letter C.No.23393/63-G3 in DTP/TP No.41/64ன்படி T.S.No.172, மற்றும் 173 ம் உள்ள இடம் பூங்கா எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

இந்நேர்வில், சென்னை வில்லிவாக்கம் பாபா நகரில் அமைந்துள்ள Lay out-ற்கான OSR தானப்பத்திரம் ஏதும் லே அவுட்தாரர்களால் வழங்கப்படவில்லை என்று பெருநகர சென்னை மண்டலம்-8ன் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட மனைப் பிரிவில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் சொத்துவரி விதிக்கப்படுகிறதா குடிநீர் இணைப்புகள் ஏதேனும் அளிக்கப்பட்டுள்ளதா என்கின்ற தகவல்களை அளிக்க இயலவில்லை, மேலும், மனுதாரர் தொடர்ச்சியாக மேற்குறிப்பிட்ட பூங்கா இடம் குறித்த புகாரினை, பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறையின் கண்காணிப்பு பொறியாளர் 7/22 முதல் 4/23 வரை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8ன் அலுவலகத்திற்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்தும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -8ன் அலுவலர்கள் மனுதாரர் குறிப்பிட்ட பூங்கா குறித்தோ அல்லது அப்பூங்கா அமைந்துள்ள குடியிருப்புகள் முறையாக அனுமதிபெற்று கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்தோ முறையாக கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்க தவறியுள்ளனர் என தெளிவாகத் தெரிகிறது. இச்செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

மனுதாரரும் இம்முறைமன்றத்தில் தனது முறையீட்டு மனுவை சமர்ப்பிக்கும் போதும், நேரடி விசாரணையில் கலந்துகொண்டு வாக்குமூலம் அளிக்கும் போதும் மேற்கண்ட நேர்வு குறித்து எவ்வித புகைப்பட ஆவணங்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

மேற்கண்ட சூழ்நிலையில், மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலர் தெரிவித்துள்ள வாக்குமூலத்திலும், ஒன்றுக்கொன்று முரண்பாடு உள்ளதாக தெரியவருவதால், வில்லிவாக்கம் பாபாநகர் லே அவுட்டில் குறிப்பிட்ட பூங்காவிற்கான T.S.No.172 மற்றும் 173ல் அமைந்துள்ள 1031 sq.meter இடத்தை DTP approved No.41/64ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 8ன் அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் முன்னிலையில், வருவாய் துறையின் மூலம் அளவீடு செய்து, ஆக்கிரமிப்பு ஏதும் கண்டறியப்பட்டால், சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும் மனுவில் கண்டுள்ள, சென்னை வில்லிவாக்கம், பாபா நகரின் மனைப் பிரிவின் வரைப்படத்தினை பெற்று, அதில் பொது பயன்பாட்டிற்கான இடங்கள் (OSR) ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்; அதற்கான தானப்பத்திரம் சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதையும் உறுதி செய்திடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-8ன் உதவி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேற்கண்ட வில்லிவாக்கம் பாபா நகரில் பொது மக்கள் பயன்படுத்தும் பூங்கா இல்லாத நிலையில் வேறு ஏதாவது இடத்தில் பூங்கா அமைத்திட வழிவகைகள் கண்டறிந்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

The Greater Chennai Corporation is directed to examine the original layout copy of this site to find out whether OSR has been marked and handed over to the Greater Chennai Corporation by legal process as per standard procedure and if so why this petitioner is raising this complaint could be unravelled. If OSR has not been handed over to the Corporation, the Zonal Officials should take necessary action against the concerned. If space for park has been marked, the Corporation should proceed further to construct one in the area. The Zonal Officer has been simply wooden and deaf to the communications from the Superintending Engineer, Park Department, Greater Chennai Corporation for nearly 6 months and sent a reply under RTI to the petitioner that Lock and Seal notice has been issued on 26.11.2022. After that no progress has been reported. This exposes the delay and sheer indifference on the part of the Zonal Officials. Action taken so far by the Greater Chennai Corporation is not satisfactory on the issue.

The issue may take an embarrassing turn if it is taken to the Court by the area inhabitants challenging the Greater Chennai Corporation Zonal authorities. Hence to avert this probability the Greater Chennai Corporation is directed to launch

appropriate action as per Town and Country Planning Act and Tamil Nadu Local Bodies Act 1998 in a time-bound manner and report the progress to this Forum in the next 60 days.

2023–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 25–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S. சிதம்பரம்,
15/115, பாபா நகர்,
3வது மெயின் ரோடு,
வில்லிவாக்கம், சென்னை – 600 049.

2) ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் - 8, பெருநகர சென்னை மாநகராட்சி,
368, புல்லா அவின்யூ, செனாய் நகர், சென்னை – 30.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

5) மாவட்ட வருவாய் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சிங்காரவேலன் மாளிகை.
எண்.62, இராஜாஜி சாலை,
நான்காவது தளம், சென்னை – 600 001.

6) வட்டாட்சியர்,
18/31, பாலி அரசன் தெரு,
ஆஸ்பிரின் கார்டன் காலனி,
குமரன் நகர், கீழ்ப்பாக்கம்,
சென்னை – 600 010.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.